# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-6, இதழ்-9, ஜூலை - 2013 ஒரு மடலின் விலை-ரூ 2.50 விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிக்கை ஆண்டு சந்தா-ரூ 30 தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு


**[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]**

## புத்தரின் எல்லையற்ற சகிப்புத்தன்மையும் கருணையும்

**(திரு. சத்திய நாரராயண கோயங்கா)**

புத்தரின் சகிப்புத்தன்மை என்பது பல புயல்களையும் திடீர்புயல்களையும், கலக்கமில்லாமல், உறுதியாக தாங்கக்கூடிய ஒரு இமயமலை சிகரம் போன்றதாகும். அவரது கருணையானது ஒரு ஆழங்காணமுடியாத பெருங்கடல் போன்றதாகும். புத்தர் தமது வாழ்நாளில் பல பழிச் சொற்களையும் இகழ்ச்சிகளையும் சந்தித்துள்ளார். ஆனால், அவதூறு கூறுபவர்கள் மீது அவரது சகிப்புத்தன்மையும் கருணையும் திடமாக காணப்பட்டது.

1. **மகத வாசிகள் செய்த நிந்தனை**: புத்தரது துறவிகளைக் கண்ட பல நகர வாசிகள், அவரை இவ்வாறு கடிந்து பேசினர்: “இந்த ஸமணர் மகத நாட்டை பிள்ளைகளற்று ஆக்குகிறார். அவர் பெண்களை விதவைகளாக ஆக்குகிறார். அவர் குல நாசத்தை விளைவிக்கிறார். ஆயிரக்கணக்கான ஜடில துறவிகளைத் தம் சீடர்களாக இப்போது தான் மாற்றினார். அதன் பின், அவர் 1250 பரிவ்ராஜகர்களைத் தமது பிடியில் எடுத்துக் கொண்டார். இப்போது மகதத்தின் புகழ்பெற்ற குடும்பங்களின் புதல்வர்களும் இவர் போதனைகளை ஏற்கின்றனர்.”

அவர்கள் பின்வரும் குத்தலான பேச்சுக்களையும் பிக்குகளைப் பார்த்து கூறினர்:
“மகாஸமனர் கௌதமர் மகதத்தின் இராஜகஹத்திற்கு வந்துள்ளார். அவர் ஏற்கனவே பலரை தம் சீடர்களாக ஆக்கிவிட்டார். யாருக்கு தெரியும், இன்னும் எவ்வளவு பேர் தான் அவர் வலையில் சிக்கப்போகிறார்களோ?”

இவ்வாறான பேச்சுக்களைக் கேட்ட புத்தர் பிக்குகளிடம் இவ்வாறு கூறினார்:

“பிக்குகளே! இம்மாதிரியான குத்தலான பேச்சுகளை நீங்கள் வெகு காலம் கேட்க மாட்டீர்கள். மக்கள் இவ்வாறு ஒரு வாரம் வேண்டுமானால் கூறலாம். ஆனால், அதன் பின் அவர்கள் தாமாகவே அமைதியாக சென்று விடுவார்கள்”

2. **ஸுப்ரிய பரிவிராஜகர் செய்த நிந்தனை:** ஒருமுறை புத்தர் இராஜகிரியிலிருந்து நாலந்தா வரை சில பிக்குகளுடன் சென்று கொண்டிருந்தார். அச்சமயம், சுப்ரியரும் அவரது மாணவரான பிரம்மதத்தனும் அவர்களைப் பின் தொடர்ந்தனர். பாதை முழுவதும் சுப்ரியர் புத்தரையும், தம்மத்தையும், ஸங்கத்தையும் இகழ்ந்து கொண்டு வந்தார். ஆனால், பிரம்மதத்தனோ புத்த, தம்ம மற்றும் சங்கத்தை பல வழிகளில் புகழ்ந்துகொண்டு வந்திருந்தார். இரவின் பொழுது, எல்லோரும் ஒரே இடத்தில் தங்கினர். இரவு முழுவதும் ஆசிரியர் சுப்ரியரும் மாணவர் பிரம்மதத்தனும் இவ்வாறே தான் பேசிக் கொண்டிருந்தனர். இரவு முழுவதும், புத்தரின் சீடர்களும் தடங்கள் ஏதும் செய்யாமல் இதனை கேட்டுக் கொண்டிருந்தனர். புத்தர் அவர்களைப் பாராட்டி, ஒருவர் மற்றவர்களால் புகழப்படும் போது, மகிழ்ச்சியும் கொள்ளக்கூடாது, மற்றவர்களால் இகழப்படும் போது, பதற்றமும் அடையக் கூடாது என்று கூறினார்.

3. **நிக்ரோத பரிவிராஜகர் செய்த நிந்தனை:** இவர் புத்தரை கண்டிக்கும் போது, இவ்வாறு கூறுகிறார்: “தனியறையில் தியானம் செய்ததால் ஸமண கௌதமர் தமது அறிவை இழந்துவிட்டார். அவரது ஞானம் சீர்கெட்டுள்ளது. அவரால் என்னுடைய எந்த கேள்விகளுக்கும் பதில் கூற இயலாது”

ஆனால், அவர் புத்தரை நேரில் சந்தித்து அவரது அமைதியையும் ஞானத்தையும் கண்ட போது, தலை வணங்கினார்.

4. **ஆக்ரோஷக பிராமணர் செய்த நிந்தனை:** ஆத்திரத்தால் எரிந்துகொண்டிருந்த இவர், புத்தரைக் கடிந்து பேசத் தொடங்கினார். அதை கேட்ட புத்தர் இவ்வாறு கூறினார்:

> “இம்மாதிரியான வசைச் சொற்கள் என்பது ஒருவருக்கு ஒருவர் இனிப்புகளைப் பரிமாறிக்கொள்வது போலாகும். நான் இதில் பங்கேற்கவில்லை. நீங்கள் வசை மொழிகளால் ஆன இந்த பரிசை எனக்கு அளித்தீர்கள், ஆனால், இந்த பரிசு உங்களிடமே இருந்து விடுகிறது. நான் அவைகளை ஏற்கவும் இல்லை, அதற்கு பதிலாக உங்களுக்கு எந்தவித பரிசும் அளிக்கவில்லை. உங்கள் பரிசு உங்களிடமே இருந்து விடுகிறது.”

ஆத்திரம் கொண்டவராக இருந்தாலும், பாரத்வாஜர் ஒரு புத்திசாலி. இரவும் பகலும் நாம் தீய சொற்களின் பரிசுகளை ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்கிறோம். ஆனால், இங்கே, இந்த நபர் இம்மாதிரியான பரிசுகளையே வாங்குவதில்லை. மாறாக, அவர் அமைதியாக இருந்து விடுகிறார். சகிப்புத்தன்மையுடன் இவர் மிக அமைதியாக இருக்கிறார். இதனை கண்டு புரிந்துகொண்டதும், அவர் புத்தரின் சிரத்தை மிக்க சீடராகிறார்.

5. **அக்கிக பாரத்வாஜர் செய்த நிந்தனை:** புத்தர் வீடு வீடாக பிக்ஷைக்காக சென்ற போது, அக்கிக பாரத்வாஜர் வீட்டின் முன் வந்தார். அவரைக் கண்டதும், அக்கிக பாரத்வாஜர் கொதித்து எழுந்து தமது எதிர்ப்பை, “மொட்டையடித்தவரே, சற்று நில்! ஸமணனே நில்! தீண்டத்தகாதவனே, அங்கேயே நில்!” என்று இவ்வாறு தெரிவிக்கிறார்.

இதைக் கேட்டதும், புத்தர் அவருக்கு யார் தீண்டத்தகாதவன் என்றும் எவை ஒருவரை தீண்டத்தகாதவனாக ஆக்குகிறது என்பதைப் பற்றியும் விளக்கினார். கருணைமிக்க புத்தரின் விளக்கத்தைக் கேட்ட அவர் சிரத்தைமிகு சீடரானார்.

6. **மாகண்டிய பரிவ்ராஜகர் செய்த நிந்தனை:** புத்தர் பயன்படுத்திய ஆசனத்தை கண்ட மாகண்டியர், "ஓ! கருவைக் கொலை செய்கின்ற ஸமண புத்தரின் ஆசனத்தை நான் பார்த்து விட்டேன். இது மிகவும் அபசகுணமிக்க அமங்களமான ஒன்றாகும்." என்று குறிப்பிட்டார். இம்மாதிரியான கடும் பழிச் சொற்களின் பொழுதும் புத்தர் திடமாகவும் கலக்கமில்லாமலும் இருக்கிறார்.

7. **சிங்க சேனாபதி செய்த நிந்தனை**: ஒருமுறை சிங்க சேனாபதி புத்தருக்கு எந்தவொரு அதியியற்கை சக்தியும் இல்லை என்ற அவதூறை கிளப்பினார். அதற்கு புத்தர், தமது போதனை அதியியற்கை சக்திகளை வெளிப்படுத்துவதற்காக அல்ல என்றும், மாறாக, துன்பத்திலிருந்து முழுவதுமாக விடுதலை அடைவதற்கே என்றும் கூறினார். இதைக் கேட்ட சேனாபதி, நன்கு புரிந்துகொண்டு புத்தரின் சீடரானார்.

8. **சிஞ்சா செய்த நிந்தனை**: ஒரு கர்ப்பிணிப் பெண்ணாக வேடம் போட்டுக்கொண்டு, சிஞ்சா ஒரு கூட்டத்தில் புத்தரை அனுகி - "கேள், மாபெரும் ஸமணனே, எனது கருவில் வளரும் உனது மகனுக்கு உன்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்றால், உனது வசதியுள்ள சீடர்களிடம் உதவி செய்யுமாறு கேள்" என்று அவரை நிந்திக்க தொடங்கினார். இந்த தவறான பழிச் சொற்களுக்கு பதிலாக, புத்தர் மிகுந்த அமைதியுடன் - "மகளே, உனது கூற்றின் உண்மை அல்லது பொய்யைப் பற்றி நம்மிருவருக்கும் நன்றாகத் தெரியும்." என்று கூறினார். இதை கேட்டப்பின்னும் கூட, அவள் மீண்டும் மீண்டும் அதையே தான் கூறிக்கொண்டிருந்தாள். ஆனால், அவளது பழிச் சொற்கள் புத்தர் மீது எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாததைக் கண்டதும் அவள் குழம்பிப் போனாள். அதில், அவள் வயிற்றில் கட்டியிருந்த கயிறு அவிழ்ந்து, மரத் துண்டுகள் கீழே விழுந்தன. உண்மை வெளிச்சத்திற்கு வந்தது. அங்கிருந்த மக்கள் சிஞ்சாவை கண்டனம் செய்தனர். ஆனால், புத்தர் அமைதியாகவும் கலக்கமுறாமலும் இருந்தார்.

9. **சுந்தரி செய்த நிந்தனை:** புத்தரை எந்தவிதத்திலும் பழிப்போட முடியாததைக் கண்ட அவரது பகைவர்கள், மேலும் ஒரு யுக்தியை கையாண்டனர். அவர்கள் சுந்தரி என்னும் பெண்ணை ஜேதவன துறவில்லத்தில் அழைத்துச் சென்று அங்கு ஒரு தனிமையான இடத்தில் அவளை கொலை செய்தனர். பின், சடலத்தை அவர்கள் நகரம் முழுவதும் எடுத்துச் சென்று, புத்தரது துறவிகள் ஒழுக்கமற்றவர்கள் மட்டுமல்லாமல், கொலைகாரர்களும் கூட என்று இழிவுபட பேசினர். ஆனால், புத்தர் பிக்குகளை அமைதியாக இருக்கும் படி வலியுறுத்தினார். இந்த வதந்தி ஒரு வாரத்திற்கு மேல் தாங்காது என்றும் கூறினார். புத்தர் கூறியபடியே நடந்தது. பிக்குகள் அமைதி காத்தனர். உண்மை தாமாகவே காலப்போக்கில் வெளிச்சத்திற்கு வந்தது.

10. **ஸாரிபுத்திரர் கைமுட்டியால் தாக்கப்பட்டார்:** தன்மீது என்ன செய்தாலும் கோபம் கொள்ளமாட்டார் ஸாரிபுத்திரர் என்று பிரபமாக கூறப்பட்டது. இதைக் கேட்ட ஒரு பிராமணன், புத்தரின் பிரதான சீடரான ஸாரிபுத்திரரின் சகிப்புத் தன்மையை சோதிக்க, அவரது முதுகில் முழு வலிமையுடன் தமது கை முட்டிகளால் தாக்கினார். ஆனால், ஸாரிபுத்திரருக்கு கோபம் வரவில்லை. அவரது சகிப்புத்தன்மையை அந்த பிராமணர் உணர்ந்தார். மிகுந்த பணிவுடன் அவரது கால்களை வணங்கி தமது வீட்டிற்கு வரும்படி ஸாரிபுத்திரரை கேட்டுக்கொண்டார். ஸாரிபுத்திரரும் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார். தம்மை தக்கிய மனிதர் மீது கோபம் கொள்ளாமல் அவரது அழைப்பை ஏற்று கருணைமிக்க மனதுடன் அவர் வீட்டிற்கு சென்ற ஸாரிபுத்திரரை மக்கள் வியப்புடன் கண்டனர்.

11. **அம்பட்ட மாணவன் செய்த நிந்தனை:** அம்பட்ட மாணவன் புத்தர் தங்கியிருந்த இடத்திற்கு சென்று, "கௌதம புத்தரும் அவரது பிக்குகளும் ஒழுக்கமற்றவர்கள்" என்று நிந்தித்தான். சாக்கிய குலத்தையும், "அவர்கள் மிகவும் கொடூரமானவர்கள். அவர்கள் பிராமணர்களை வனங்குவதுமில்லை, மதிப்பதுமில்லை. ஆதலால், அவர்கள் பாவிகள்" என்று இகழ்ந்தான். அதன் பிறகு, புத்தர் அவனுக்கு மிகவும் அமைதியாக யாருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் யார் பாவிகள் என்பதைப் பற்றியும் விளக்கினார். இதைக் கேட்ட அம்பட்டன் அடக்கத்தை கடைபிடித்தான்.

12. **மாகண்டியா செய்த நிந்தனை:** மாகண்டியரின் மகளான மாகண்டியா மிகவும் அழகுடையவளாக இருந்தாள். அவளுக்காக ஒரு நல்ல மனமகனை அவளது தந்தை தேடிக் கொண்டிருந்தார். புத்தரைக் கண்டதும், அவரது நிகரற்ற அழகைக் கண்டு அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அவர் புத்தரைத் தமது மாப்பிள்ளையாக கருதினார். அவர் தமது மனைவியையும் மகளையும் அங்கு அழைத்தார். பிராமணர் மாகண்டியர் புத்தரிடம் தமது மகளை திருமணம் செய்துகொள்ளும் படி முன்மொழிந்தார். புத்தர் இதனை ஒரேயடியாக நிராகரித்தார். அந்த பிராமணர் தன் மகளின் அழகை வர்ணித்தார். ஆனால், புத்தரோ, "நான் எப்படி இவளை எனது மனைவியாக ஏற்றுக்கொள்ள முடியும்? எனது காலால் கூட நான் அவளை தொடமுடியாது." என்று கூறிவிடுகிறார். அதன்பிறகு, அவர் பூரண ஞானம் அடைந்ததை பிராமணரிடம் கூறுகிறார். அதைக் கேட்டதும், பிராமணர் மாகண்டியரும் அவரது மனைவியும் புத்தரிடம் சரண் புகுந்து முழு விடுதலை நிலையை அடைகின்றனர்.

புத்தரால் நிராகரிக்கப்பட்ட அப்பிராமணரின் மகளான மாகண்டியா பெரிதும் புண்பட்டார். பிற்காலத்தில், அவளது அழகின் விளைவாக, அவள் கோஸம்பியின் அரசரான உதயனை திருமணம் செய்துகொள்கிறார். பின்னர், அரசியாகவும் ஆகிறாள். ஆனால், புத்தர் விளைவித்த அவமானத்தை அவளால் மறக்கமுடியவில்லை. ஒருமுறை புத்தர் ஆனந்தருடன் அந்நகரத்திற்கு வந்தார். அவர்களைக் கண்டதும், அவள் தமது பணியாட்களிடம் புத்தரைத் தகாத வார்த்தைகளில் இழிவுபடுத்தும்படி கட்டளையிட்டாள்.

அவர்களும் அவ்வாறே செய்தனர். பிறகு, ஆனந்தர் புத்தரிடம் - "ஐயனே! இந்த பண்பாடற்ற மனிதர்கள் தங்களை இழிவாக பேசுகின்றனர். நாம் ஏன் அடுத்த நகரத்திற்கு செல்லக் கூடாது?" என்று பரிந்துரைத்தார். அதற்கு புத்தர் - "ஒருவேளை அங்குள்ள மக்களும் இவ்வாறே செய்தால், நாம் எங்கு செல்வது?" என்று கேட்டார்.

புத்தர் மேலும் ஆனந்தரிடம் - "நான் ஒரு போரில் சண்டையிடம் யானை போலாவேன். எல்லா திசைகளிலிருந்து வரும் அம்புகளை அது பொறுத்துக் கொள்வது போல, நானும் பல ஒழுக்கமற்ற மக்களிடம் வரும் பழிச் சொற்களைத் தாங்கிக் கொள்கிறேன். அவ்வாறு செய்வது எனது கடமையாகும். புகழ்ச்சி எவ்வாறோ அவ்வாறே இகழ்ச்சி. இவ்விரு சூழ்நிலைகளிலும் சமநிலையுடன் இருப்பதே உண்மையான தம்மமாகும்." என்று விளக்கினார்.

தமது வாழ்நாளில் புத்தர் பலமுறை பல தருணங்களில் அவமதிக்கப்படுகிறார். ஆனால், அவர் புத்தராவார். இவ்வாறான இகழ்ச்சிகளால் அவர் எவ்வாறு கலக்கமடைய முடியும்! இமயமலை சிகரம் போல அவரது பொறுமை. அவரை இகழ்ந்தவர்கள் மீது அவர் உள்ளத்திலிருந்து கருணை தான் வெளிப்பட்டன. அவரது பேரன்பானது ஆழங்காணமுடியாத பெருங்கடல் போன்றதாகும்.

பெரும்பாலும், அவரது புகழும் அவரது போதனை பரவுவதையும் விரும்பாதவர்களிடமிருந்து தான் பழிச் சொற்கள் வந்தன. அவரது போதனை மேலும் பரவாமலிருக்க, எப்படியாவது அவருக்கு அவதூறு விளைவிப்பதே அவர்களது நோக்கமாக இருந்தது.

இவர்களைத் தவிர, தேவதத்தனும், புத்தரின் மதிப்புமிக்க பதவியை ஆக்கிரமிக்க ஆயத்தமாக இருந்ததால், அவரைக் கடுமையாக குறை கூறி வந்தார். ஆனால், புத்தருக்கு அவர் மீது வெறும் கருணையே இருந்து வந்தது. ஒருமுறை தேவதத்தன் புத்தர் மீது பொய்யான வதந்திகளைக் கூறி சங்கத்திலிருந்து 500 பிக்குகளை இணங்கச் செய்தார். சங்கத்தில் பிளவு ஏற்படுத்தி ஒரு புதிய சங்கத்தை அவர் நிறுவ முற்பட்டார். ஆனால், இதில் அவரால் வெற்றிகொள்ள முடியவில்லை.

நாட்டின் அரசர் புத்தரது மாபெரும் சீடராக இருந்தார். அவர் உயிருடன் இருக்கும் வரையில், புத்தரது பெயரும் புகழும் மங்காது என தேவதத்த நினைத்தார். ஆகவே, இளவரசர் அஜாதஸத்ருவை ஆட்கொண்டு, அவர் மூலம் தமது தீய திட்டங்களைப் பூர்த்தி செய்துகொள்ளலாம் என எண்ணினார்.

சில அற்புதங்களை நிகழ்த்தி, அவர் அஜாதஸத்ருவை கவர்ந்தார். பிறகு, அரசரை கொலை செய்து சிம்மாசனத்தை பறிக்கும்படியும் இளவரசருக்கு அறிவுரை கூறினார். அஜாதஸத்ரு அரசர் பிம்பிசாரரை கொலை செய்ய முற்பட்டான். ஆனால், அவனது முயற்சி தோல்வியில் முடிந்தது. இதை அறிந்த அரசர் தாமாகவே பதவி விலகி, அஜாதஸத்ருவை அரசராக நியமித்தார்.

ஆனால், தேவதத்த இதில் திருப்தி அடையவில்லை. ஏனெனில், பிம்பிசாரர் அரசர் அல்லாத போதிலும் கூட, மக்கள் அவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர். ஆகையால், பிம்பிசாரரை சிறையில் அடைக்க தூண்டினார். சிறையில் அவர் பசியால் உயிர் இழக்கிறார்.

இப்போது தேவதத்த மிகவும் பெருமிதம் கொள்கிறார். எனது சீடன் இப்போது அரசராக இருப்பதால், நான் இனி பயப்பட தேவையில்லை என நினைத்தார். ஆகவே, புத்தரைக் கொலை செய்ய பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், ஒவ்வொரு முறையும் அவர் தோல்வியையே தழுவினார். இமய மலைப் போல புத்தர் திடமாக இருந்தார். தேவதத்தாவின் மேல் புத்தருக்கு இருந்த பேரன்பு மிகவும் ஆழமாகவே இருந்தது.

இச்சம்பவங்கள் புத்தரின் இரண்டு பண்புகளைச் சுட்டிக் காட்டும் எடுத்துக்காட்டுகளாகும். புத்தரின் உறுதியான சகிப்புத்தன்மையும், ஆழமான பேரன்பும் இத்தகையதாக இருந்தது!

புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து நாமும் உற்சாகத்தை பெற வேண்டும். ஒருவர் நம்மை குறை கூறினால், அதில் ஏதாவது உண்மை இருப்பின், நாம் உடனடியாக அதனை திருத்திக் கொள்ள வேண்டும். அதில் உண்மை ஏதும் இல்லையெனில், நாம் கலக்கமற்று இருக்க வேண்டும். குறை கூறியவர் மீது எல்லையற்ற பேரன்பை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**இதுவே தம்மத்தின் செய்தியாகும். இவ்வாறே செய்தாக வேண்டும். இதில் தான் நம் அனைவரின் மகிழ்ச்சியும் அடங்கியுள்ளது! இதில் தான் நம் அனைவரின் நன்மையும் அடங்கியுள்ளது!**

## புண்ணிய பலன்கள் பெற ஒரு அரிய வாய்ப்பு

தமிழகத்தின் இரண்டாவது விபஸ்ஸனா தியான மையமான 'தம்ம மதுரா'வை நிறுவும் பணி மகிழ்ச்சிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆரம்பகட்டமாக 15 தியானிகள் தங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தியான முகாமும் தொடங்கப்பட்டுவிட்டது. இதற்கான நன்றி உடல், மனம் மற்றும் பொருள் அளவில் உவகை உள்ளத்துடன் உதவிய தியான சாதகர்களையே சாரும்.

முதற்கட்டமாக 40 தியான சாதகர்கள் தங்குவதற்கான இருப்பிடங்கள் கட்டும் பணி 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலையும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. தற்போது கைவசம் 40 லட்சம் ரூபாய் மட்டும் உள்ளதால் மீதம் 30 லட்சம் ரூபாய் தேவைபடுகிறது. நன்கொடை செலுத்த வேண்டிய வங்கி மற்றும் தொடர்பு விபரங்கள் -

RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07
REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA No. TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/11-13

| | |
|---|---|
| Bank | State Bank of India, Anaiyur Branch, Madurai |
| Account number | 31262542660 |
| Account Name | VIPASSANA MEDITATION CENTRE, MADURAI |
| SBI branch IFS Code | SBIN0012764 |
| SBI Swift code | SBININBB454 |
| Contact Mobile No. | 9443728116 / 9442603490 |
| Email ID | dhammamadhura@gmail.com |

## தம்ம மதுராவில் 10-நாள் முகாம்கள்(ஆண்களுக்கு மட்டும்) கால அட்டவணை - 2013

| | |
|---|---|
| ஜூலை | 17-28 |
| ஆகஸ்டு | 14-25 |
| செப்டம்பர் | 18-29 |
| அக்டோபர் | 09-20 |
| நவம்பர் | 20-01 |
| டிசம்பர் | 18-29 |

பதிவு செய்ய:

1. திருமதி. ரேணுகா மேத்தா - 9443728116 / 9442603490
2. திரு. மகேஷ் பன்சல் - 9843451153

தம்ம மதுரா,
விபஸ்ஸனா தியான மையம், செட்டியாபட்டி கிராமம், திண்டுக்கல்,
காந்திகிராம் பல்கலைக்கழகம் அருகில்,
**இணையதளம் மூலம் பதிவு செய்ய:**
http://courses.dhamma.org/en/schedules/schmadhura,
**மின் அஞ்சல்:** dhammamadhura@gmail.com

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவணை: 2013

விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, தொலைபேசி: 9444290953, 9444280952

| மாதம் | 10-நாள் | ஸதிபட்டான | 20-நாள் | 30-நாள் | 3-நாள் | 1-நாள் | சிறுவர் முகாம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 3-14, 17-28 | | | | 18-21 | 7<br>22 (குரு பௌர்ணமி) | 14,28 |
| ஆகஸ்டு | 31 (ஜூலை)-11<br>14-25, 28-8(செப்டம்பர்) | | | | 28-31 | 4 | 11,25 |
| செப்டெம்பர் | 11-22 | | | | 12-15 | 1 | 22 |
| அக்டோபர் | | 26(செப்டம்பர்)-04 | 26 (செப்)-17 | 26 (செப்)-27 | 30-2(Nov) | 6 | |
| நவம்பர் | 6-17, 20-1 (டிச) | | | | 21-24 | 3 | 17 |
| டிசம்பர் | 4-15, 18-29 | | | | | 1 | 1,29 |

**ஒரு நாள் தியான முகாம்கள்:**
கூட்டுத்தியானம்: மகாபோதி, எழும்பூர்: சனிக்கிழமை 2 - 5 மணி வரை.
ஒரு நாள் முகாம்: மகாபோதி: ஞாயிறு காலை 9 முதல் மாலை 4:30 மணி வரை.(தொலைபேசி:9841591734)
தி.நகர்: ஞாயிறு காலை 8:00 முதல் 1:00 மணி வரை (தொலைபேசி: 9445391295)

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

Published on: 04/07/2013, Posted on: 13/07/2013
POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

அனுப்புனர்: Vipassana Meditation Centre
T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 ☏: 9444290953, 9444280952
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vri.dhamma.org, www.setu.dhamma.org, www.tamil.dhamma.org